பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 09 2026 SUNDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- விபத்துக்களை குறைக்க ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளதாக ரயில்வே இணையமைச்சர் திரு.வி.சோமன்னா தெரிவித்துள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பால் காங்கிரஸ் பொய் பிரசாரம் தோல்வி அடைந்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.
- மாநிலத்தில் நிலவும் மின்வெட்டு பிரச்சனைக்கு தவெக அரசு உரிய தீர்வுகாணவில்லை என்று திமுக குற்றம் சாட்டியுள்ளது.
- இந்தியா-வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள்

----------------

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

-------------

விபத்துக்களை குறைக்க ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளதாக ரயில்வே இணையமைச்சர் திரு.வி.சோமன்னா கூறியுள்ளார்.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் குண்டூர்-நம்பூர் ரயில் நிலையங்களுக்கிடையே நான்குவழி சாலை மேம்பாலம் அமைப்பதற்கு நேற்று அடிக்கல் நாட்டி பேசுகையில் இதனை தெரிவித்தார்.

ரயில்வே மேம்பாலங்கள் மூலம் விபத்தில்லா பயணத்தை ரயில்வே உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேம்பாலங்கள் கட்டப்படுவதால் லெவல் கிராசிங்குகளில் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருப்பது தவிர்க்கப்படுவதால் எரிபொருளும் சேமிக்கப்படும் என்று தெரிவித்தார்.

நாடு முழுவதும் ரயில் பயணிகளின் வசதிக்காக பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு சோமன்னா கூறினார்.

-------------

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பால் காங்கிரஸ் பொய் பிரசாரம் தோல்வி அடைந்துள்ளதாக தமிழக பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

ஆணையத்தின் அனைத்து முக்கிய முடிவுகளும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டவைகள் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் மற்றும் ஆணையர்கள் ஒன்றாக செய்தியாளர்களிடம் தெரிவித்திருப்பதை சமூக வலைதளத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தொடர்பான நடைமுறைகள் மற்றும் படிவம்-6 தொடர்பாக உச்சநீதிமன்றமே சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்துள்ளபோதிலும், அந்த தீர்ப்பையும், ஜனநாயக அமைப்புகளையும் காங்கிரஸ் தவறாக சித்தரித்தது என்றும்
அவர் கூறியுள்ளார்.

தேர்தல் நடைமுறைகளில் முழுமையான வெளிப்படை தன்மையை உறுதிசெய்ய ஆணையம் எடுத்துள்ள வரலாற்று சிறப்புமிக்க முடிவுகளை பாராட்ட காங்கிரஸ் கட்சிக்கு மனமில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

-------------

மாநிலத்தில் நிலவும் மின்வெட்டு பிரச்சனைக்கு தவெக அரசு உரிய தீர்வுகாணவில்லை என்று சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இடைத்தேர்தல் நடைபெற உள்ள தாராபுரம் தொகுதியில் நேற்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட அவர், ஆட்சிக்கு வந்த உடன் மகளிர் உரிமை தொகை 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற வாக்குறுதியும், 6 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று தெரிவித்தார்.

கூட்டுறவு வங்களில் விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யவில்லை என்றும் இதனால் விவசாயிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் போராட வேண்டிய நிலைமையை தவெக அரசு ஏற்படுத்திவிட்டது என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் குறை கூறினார்.

-------------

தமிழக அரசு கடன் சுமையை சந்தித்து வரும் நிலையில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தேவையற்றது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத்தேர்தலை முன்னிட்டு, தமது கட்சி வேட்பாளரை ஆதரித்து நேற்று அந்த தொகுதியில், பிரசாரம் மேற்கொண்ட அவர், மாநில அரசின் கடனுக்காக ஆண்டுக்கு 78 ஆயிரம் கோடி ரூபாய் வட்டிக்காக செலுத்தப்படுகிறது என்று கூறினார்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அஇஅதிமுக ஆட்சி காலத்திலேயே அரசாணை வெளியிடப்பட்டதாகவும், பின்னர் ஆட்சி மாற்றத்தால் அந்த பணி நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தவெக அரசு அறிவித்திருந்தாலும் அது அஇஅதிமுக அரசு எடுத்த நடவடிக்கையின் தொடர்ச்சிதான் என்றும் புதிய அறிவிப்பு அல்ல என்றும் அவர் கூறினார்.

-------------

அனைத்து பொதுத்துறை வங்கிகளும், கிராமப்புற வங்கிகளும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக இன்று செயல்படும் என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

வங்கி ஊழியர் சங்கங்கள் வரும் திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு தேசிய அளவிலான வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அனைத்து வங்கி கிளைகள், வங்கி சார்ந்த அலுவலகங்கள் மற்றும் ஏடிஎம் வசதியுள்ள வங்கிகள் அனைத்தும் இன்று முழு நேரமும் செயல்படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

வாடிக்கையாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பல பொதுத்துறை வங்கிகள் ஏடிஎம் பணப்பரிவர்த்தனைக்கான கட்டணங்களை தள்ளுபடி செய்துள்ளதாக அறிவித்துள்ளன.

மாதத்திற்கு 3 முறைக்கு மேலும் ஏடிஎம் சேவையை கட்டணமின்றி பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் பொதுத்துறை வங்கிகள் அறிவித்துள்ளன.

-------------

இளம் வழக்கறிஞர்கள் அர்ப்பணிப்புணர்வுடன் கடுமையாக பணியாற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

காரைக்கால் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சட்டத்தொழிலில் நீண்டகாலம் அனுபவம் பெற்ற மூத்த வழக்கறிஞர்கள் தங்களது அனுபவங்களையும், அறிவாற்றலையும் இளம் வழக்கறிஞர்களுக்கு எடுத்து சொல்லி, அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், புதுச்சேரி தலைமை நீதிபதி டி வி ஆனந்த், காரைக்கால் மாவட்ட நீதிபதி கே. மோகன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

-------------

தாம்பரம் விமானப்படை நிலையத்தில் உள்ள விமானப்பயிற்சி பயிற்றுவிப்பாளர் பள்ளியில் இருந்து 54 விமானிகள் பயிற்சியை நிறைவு செய்தனர்.

இதில், இந்திய விமானப்படையை சேர்ந்த 42 பேரும் இந்தியக் கடற்படையை சேர்ந்த 7 பேரும், இந்திய ராணுவத்தை சேர்ந்த 3 பேரும், கடலோர காவல்படையை சேர்ந்த 2 பேரும் பயிற்சியை நிறைவு செய்தனர்.

கடந்த ஏப்ரல் 13-ம் தேதி தொடங்கிய இப்பயிற்சி 24 வாரங்கள் நடைபெற்றது.

பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு விமானப்படையின், மேற்கு மண்டல தலைமை அதிகாரி ஏர்மார்ஷல் ஜார்ஜ் தாமஸ் சான்றிதழ்களை வழங்கினார்.

-------------

ஹோர்முஸ் நீரிணையை முழுமையாக திறப்பது குறித்து ஈரான் தெரிவித்த யோசனை தொடர்பாக அமெரிக்காவிடமிருந்து அதிகாரப்பூர்வ பதில் வரவில்லை என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அபாஸ் அனகாச்சி கூறியுள்ளார்.

-------------

பிஜேபி அழைப்பின் பேரில் இலங்கை ஆளுங்கட்சியான ஜனதா விமுக்தி பெருமுனாவின் உயர்தலைவர்கள் அடங்கிய 5 பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இன்று புதுதில்லி வருகிறார்கள்.

-----------

நாட்டின் முதலாவது தானியங்கி வாகன சோதனை மையம் புதுதில்லியில் திறக்கப்பட்டுள்ளது.

-----------

ஒடிசா மாநிலத்தில் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் படகுகளில் சென்று மீட்டனர்.

-----------

அடுத்த மாதம் 2-ம் தேதி நடைபெற உள்ள பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவு பொருட்கள் மின்னணு ஏலத்தில் மகாராஷ்டிராவின் பாரம்பரிய கலைப்பொருட்கள் இடம் பெற்றுள்ளன.

------------

மதுரை மாநகராட்சி சௌபாக்கியவதி நகர் கண்மாயில் மின்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர் நிர்மல் குமார் பனை விதைகளை நடவு செய்யும் பணிகளை நேற்று தொடங்கி வைத்தார்.

------------

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில், காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அணிவகுப்பு நேற்று வாணியம்பாடியில் நடைபெற்றது.

-------------

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூர் புலிகள் சரணாலய பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

----------

பெரம்பலூர் மாவட்டத்தில் கர்பப்பை வாய் புற்றுநோயை தடுக்க இளம் பெண்களுக்கு தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக மாவட்ட சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

-----------

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உயர்அழுத்த மின்சாரத்தால் 20 வீடுகளில் தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி உள்ளிட்டவை சேதம் அடைந்தன.

------------

இந்தியா-வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

இரண்டு மாத இடைவெளிக்கு பின்னர் ரோகித் சர்மா, விராட்கோலி ஆகியோர் இந்திய அணிக்கு திரும்பியுள்ளனர்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் வெஸ்ட் இண்டிஸ் அணி, மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கிறது.

இந்தப் போட்டிகளை தொடர்ந்து 5 டுவெண்டி டுவெண்டி போட்டிகளிலும் பங்கேற்க உள்ளது.

ஒருநாள் போட்டி தொடரை சுப்மான்கில் தலைமையிலும், டுவெண்டி டுவெண்டி போட்டி தொடரை ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலும் இந்திய அணி எதிர்கொள்ள உள்ளது.

----------

ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஸ்குவாஷ் பிரிவில் இந்தியா இன்று இறுதி போட்டியில் பங்கேற்கிறது.

இன்று நடைபெற உள்ள மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் *Anahat Singh* மலேசிய வீராங்கனையை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் *Abhay Singh* மலேசிய வீரரை எதிர்கொள்கிறார்.

ஆடவர் டெக்கத்லான் இறுதிப் போட்டியில் தேஜஸ்வின் சங்கர் பங்கேற்கிறார்.

>>>>>>>>END<<<<<<<